பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 20 பங்குனி 2 ரபி அவ் 5 இதழ் 33
யாழ்ப்பாணம் புதன்கிழமை 15-3-78

சன்சயின் சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
இது ஓர் லாலா தயாரிப்பு
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## மது 'பர்மிட்' பற்றி தமிழக முதல்வர்

சென்னை, மார்ச். 14

மதுபானம்பெறுவது சம்பந்தமாக வழங்கப்படும் 'பர்மிட்' குறித்து சரியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் இன்று தமிழக சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு, கோதண்டராமன் இன்று தமிழக சட்ட மன்றத்தில் பேசுகையில், மதுபானம் வழங்கப்படுவது சம்பந்தமாக அரசு கையாளும்முறை மாற்றப்படவேண்டும் என்றும் ஏழை, பணக்காரன் என்றில்லாமல் மது 'பர்மிட்' எவருக்கேனும் வழங்கக் கூடாதுஎன்றும் கேட்டுக்கொண்டார்.

# கூட்டுறவுத்துறை புனரமைப்பு: அறுவர் கமிட்டி நியமனம்

(கொழும்பு)

கூட்டுறவுத் துறையைச் சீரமைப்பது சம்பந்தமான வழிவகைகளைக் கண்டுபிடிக்கும் வகையில் அறுவர் அடங்கிய கமிட்டியொன்று நேற்று உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பி ஹேரத்தினால் நியமிக்கப்பட்டது.

நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகத்தை தலைவராகக் கொண்ட இக் கமிட்டியில் பாராளுமன்ற அங்கத்தவர்கள் மூவரும் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் இருவரும் உள்ளனர்.

கூட்டுறவுத் துறையை எவ்விதமாக மாற்றி அமைக்கலாம் என்பது குறித்தும் புதிய திட்டங்கள் எவ்விதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது பற்றியும் இக்கமிட்டி விசாரணைகள் நடத்திஅறிக்கைசமர்ப்பிக்கும். அறிக்கையை மூன்று மாதங்களில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அமைச்சர் ஹேரத் பணித்துள்ளார். ம

# இஸ்ரேல் அதிரடி;

## உஷார் நிலையில் பாலஸ்தீனியர்!

### அரபாத் எச்சரிக்கை

லண்டன், மார்ச், 14

பாலஸ்தீன கமாண்டோக்கள் இஸ்ரேலில் நடத்திய திடீர்த்தாக்குதலுக்கு இஸ்ரேல் எந்த நேரம் பதிலடி கொடுக்கும் என்று கமாண்டோக்கள் கடந்த 48 மணிநேரமாக உஷார் நிலையில் இருக்கின்றனர்! இதேநேரத்தில், இஸ்ரேலின் எல்லைப் புறத்திற்கு கவசப் படைகளையும் மற்றும் அதிரடிப் படைகளையும் இஸ்ரேல் நேற்று அனுப்பிவைத்ததாக செய்திகள்தெரிவித்தன.

கமாண்டோ படையினர் கடந்த சனிக்கிழமை, இஸ்ரேலியர்கள் மீது நடத்திய தாக்குதலுக்கு எதிர்த்தாக்குதலை இஸ்ரேல் எந்த நேரத்திலும் நடத்தலாம் என்று பாலஸ்தீனியர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இதன் எதிரொலியாக தெற்கு லெபனானிலுள்ள பாலஸ்தீனியர்கள் கடந்த 48 மணிநேரமாக உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது பற்றி திரு. அரபாத் இன்று பெய்ருட்டில் தெரிவிக்கையில், இஸ்ரேல்-லெபனான் எல்லைப்புறத்துக்கு இஸ்ரேல் பிரமாண்டமான அளவில் துருப்புகளை அனுப்பியுள்ளது என்றும், இஸ்ரேலின் அதிரடியைச் சமாளிக்க தயாராக வேண்டும் என்றும் கூறினார்.

## அனுராதபுரத்திலிருந்து தப்பி ஓடிய மூன்று சிறைக் கைதிகள் மீண்டும் கைது!

(கொழும்பு)

அனுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடியவர்களில் மூன்று கைதிகள் நேற்று பிடிபட்டனர்.

அனுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து இரண்டு வாரங்களுக்கு முன்னர் நான்கு சிறைக் கைதிகள் தப்பி ஓடினார்கள் இவர்களில் ஒருவர் நேற்று பகலை வங்கிக்குள் நுழைந்து கொள்ளையடிக்க முயன்றபோது வகையாக மாட்டிக் கொண்டதைத் தொடர்ந்து மற்றைய கைதிகள் இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர். ஒருவர் மட்டும் தலைமறைவாகியுள்ளார்.

தப்பி ஓடிய சிறைக் கைதிகளில் ஒருவர் கைக்குண்டுடன் வங்கிக்குள் நுழைந்து அங்குள்ளவர்களைப் பயமுறுத்தியபோது, வங்கி லிகிதர் ஒருவரின் சமயோசிதப் புத்தியினால் இக்கைதி அங்குள்ளவர்களினால் மடக்கப்பட்டாரென்றும், இவரைக் கைது செய்வதில் கிராம மக்களும் பெரும் உதவியாக இருந்தனர் என்றும் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர். இவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து மற்றைய இரு சிறைக் கைதிகள் நேற்று சிக்கிக் கொண்டனர்.

## உணவிலிருந்த சிப்பி; அதன் பெறுமதி ரூ. 60,000

லண்டன், மார்ச் 14

அதிர்ஷ்டம் எப்படி வரும்?

பல ரூபத்தில் வரும்; கூரையைப் பிய்த்துக் கொண்டும் வரும் என்று கூறுவார்கள். அதே நேரத்தில், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விட்டதே என்று குறை கூறுபவர்களும் உண்டு.

ஆனால்; கையில் அகப்பட்டு, வாய்க்குள் சென்று, பின்னர் உணர்வு ஏற்பட்டு...அதிர்ஷ்டம் வருவதென்றால்...? இப்படியானதொரு ருசிகரமான சம்பவம் வெனிஸ் நகரில் நேற்று இடம் பெற்றுள்ளது!

வெனிஸ் நகர சிற்றுண்டிச்சாலை யொன்றுக்குள் நுழைந்த பெண் ஒருத்தி, கடலுணவில் ஆசைப்பட்டு 'ஆடர்' கொடுத்தார். உடனடியாக கடலுணவு மேசைக்கு வந்தது. அந்தப் பெண் ருசித்த சிப்பிவகையான உணவில் முத்தொன்று வாயில் அகப்பட்டது.

[6ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணத்தில் ஆஸி. புகைப்படக்கண்காட்சி இன்று கடைசிநாள்

[யாழ்ப்பாணம்]

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பன்னிரண்டு புகைப்படக் கலைஞர்களது புகைப்படக் கண்காட்சியொன்று யாழ்ப்பாண பொதுநூலகக் கேட்போர் கூடத்தில இறுதித் தினமாக இன்று நடைபெறுகிறது.

இக்கண்காட்சியைத் தினமும் 3000க்கும் அதிகமான மக்கள் கண்டுகளித்துள்ளனர். கண்காட்சியில் ஆஸ்திரேலிய நாட்டின் புகைப்பட வளர்ச்சி பற்றிய ஆரம்ப காலப் புகைப்படங்களும், தற்போதைய புகைப்படக் கலை நுணுக்கங்கள் பற்றிய 100க்கு மேற்பட்ட புகைப் படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மெல்போன், சிட்னி, ஆஸ்திரேலிய பூந்தோட்டம் ஆஸ்திரேலிய தேசியதினம் பற்றிய வர்ணப்படங்களும் காட்சியில் இடம்பெற்றுள்ளன. இக் கண்காட்சி கடந்த 12ம் திகதி முதல் நடைபெற்றுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## கடன் வழங்கும் திட்டம்

(கொழும்பு)

மீனவர்களுக்கு கடன் வழங்குந்திட்டமொன்றை இலங்கை மக்கள் வங்கி ஆரம்பிக்கவுள்ளது.

## பிரெஞ்சுத் தேர்தல்: எதிர்க்கட்சிக்கு அதிக வாய்ப்பு!

பாரிஸ், மார்ச் 14

பிரான்ஸில் நடைபெற்ற முதலாவது கட்ட தேர்தலில் இடது சாரி எதிர்க் கட்சிகள் கூடுதல் வாக்குகளைப் பெற்றுள்ளன.

ஆளும் (மத்திய வலது சாரி) கூட்டணி அரசுக்கும், எதிர்க் கட்சிகளுக்குமிடையே நடைபெறும் இம் மோதலில், ஆளும் கூட்டணிக் கட்சிகள் வெற்றி பெறலாம் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்ட போதிலும்; எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இரண்டாவது கட்ட வாக்களிப்பிலும் இடது சாரியினரே வெற்றி வாகை சூடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதல்கட்ட வாக்கெடுப்பில் இடதுசாரிக்கட்சிகள் கூடுதல் வாக்குகளைப் பெற்றபோதிலும், எதிர்பார்த்த அளவு வாக்குகளைப் பெறவில்லை. இதேநேரத்தில் எதிர்வரும் 2வது கட்ட வாக்களிப்பில் இடதுசாரிக்கட்சிகள் கூட்டு முன்னணியாகப் போட்டியிட இப்பொழுது முடிவுசெய்துள்ளன. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, ஒரு தொகுதியில் ஒருவர் என்ற ரீதியில் போட்டியிட இப்பொழுது கூட்டுத்திட்டம் வரைந்துள்ளன.

வலதுசாரி அரசாங்கத்தை எப்படியும் வீழ்த்துவதே இடதுசாரிக்கட்சிகளின் ஒரே முயற்சியாக இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

# சாராய விற்பனை: ஒருவருக்கு ரூபா 150 அபராதம்!

## கச்சதீவு நீதிமன்றம் அளித்த தீர்ப்பு

(வண்ணார்பண்ணை)

கச்சதீவில் சட்டவிரோதமாகச் சாராயம் விற்பனை செய்தவருக்கு, கச்சதீவு சுற்றுலா நீதிமன்ற நீதிபதி திரு. ஏ. எஸ். நடராசா 150 ரூபா அபராதம் விதித்தார்.

கச்சதீவில் மதுபானம் வைத்திருப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தபோதும் சட்டவிரோதமாகச் சாராயத்தை வைத்திருந்ததற்கு 50 ரூபாவும், விற்பனை செய்ததற்கு 100 ரூபாவும் மொத்தம் 150 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சுன்னாகத்தைச் சேர்ந்த இன்னத்துரை தேவராசா என்பவருக்கு எதிராக [illegible] ஊர்காவற்றுறைக் கலால் பகுதிப் பொறுப்பதிகாரி திரு. எம். இராசரத்தினம் இக்குற்றச்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

கஸ்தூரியார் வீதியிலுள்ள ஹோட்டல் ஒன்றிற்கு இரண்டு காசாளர் தேவை. பிணைப் பணம் ரூபா 2000/- செலுத்த வேண்டும். 8 மணிநேர வேலை. உணவு வசதிகளுடன் திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். விரும்பியோர் 20-3-78 திகதிமுன் விண்ணப்பிக்கவும். திறீ கொயின்ஸ் ஹோட்டல், 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 8741

யாழ்ப்பாணத்தின் பிரபலமான வியாபார நிறுவனம் ஒன்றுக்கு காசாளர் (CASHIER) பிணைப் பணத்துடன் தேவை. நல்லொழுக்கமும் நேர்மையான குணமும் உடையவராயிருத்தல் வேண்டும். G. C. E. O/L சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கவும். மாத வேதனம் ரூபா 300/-. விளம்பர இல. 8755, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8755

இருப்புப் பதிவு விஞைர் (STOCK CLERK) 25-40 வயதிற் குட்பட்டவர்களாயும், G. C. E. O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தியடைந்தவர்களாயும் இருத்தல் வேண்டும். இருத்தல்வேண்டும். இரு பாலாரும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 8756 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8756

பிடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள சேல்ஸ்மனும், தேநீர்க் கடைக்குச் சபலை செய்பவரும், கோக்கி வேலை செய்வதற்கும் ஆட்கள் உடன் தேவை. நேரில் வரவும்: ராஜன் புத்தகசாலை ரெடிமேட் காமன்ஸ், நல்லூர் மார்க்கட், கல்வியங்காடு. 8747

### விற்பனைக்கு

ஆனையிறவில், கண்டி வீதியில் சங்கத்தர வயல் குறிச்சியில் 9 ஏக்கர் 3 குளி காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி அம்பலவாணர், 7, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். 8751

ஒஸ்டின் 30 EL 5000 தொடர் இலக்கம். சமீபத்தில் திருத்தம் செய்யப்பட்டது. நியாயமான விலை ரூபா 26,500/-க்கு மேல் கொடுக்கக் கூடியவர்கள் மட்டும் பார்வையிடலாம். கட்டாயமாகத் தரகர்கள் வேண்டாம். 15, சோமசுந்தரம் அவென்யூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 8750

### இன்று

வண்ணை சிவன் கோயிலில் 10ந் திருவிழாவாகிய இன்று பகல் 9 மணிக்கு பக்தோற்சவமும், பகல் 10-15 மணிக்கு பக்தரன் யாககும்பாபிஷேகமும் மாலை 3-15 மணிக்கு சிவன் யாக ஆரம்பமும் மாலை 6-30 மணிக்கு பஞ்சமூர்த்திகளுக்கு பூஜையும் பின்னர் சந்திரசேகரப் பட்டமும், சுவாமி பூக்கேடகத்தில் திருவீதிவலம் வருதலும். இரவு 7-45 மணி முதல் ஸ்ரீ நித்தியானந்த சர்மா அவர்களின் மகாபாரத விரிவுரைத் தொடரும் இடம்பெறும்.

### கல்வி

G. S. Q. (தூய கணிதம், பிரயோக கணிதம், புள்ளிவிபரவியல், பௌதிகம், இரசாயனம், தாவரவியல், விலங்கியல்) வகுப்புகள் திறமையும் அனுபவமுமுள்ள விரிவுரையாளர்களால் நடாத்தப்பட்டு வருகின்றன. A/L அல்லது கணித, விஞ்ஞான பயிற்றப்பட்ட ஆசிரியர், தகைமையுள்ளவர்கள் பதிவுசெய்யலாம். விஞ்ஞானப் பாடங்களுக்குரிய செயன்முறைப் பயிற்சிகள் கல்வி இலாகாவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதிபர், உயர் கல்விக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்புகொள்க. 8749

வெல்டிங் தொழில் டிப்ளோமா [Diploma in Welding Technology], படம் வரையுநர் டிப்ளோமா (Diploma in Draughtsmanship), மோட்டோர் தொழில் நுட்ப டிப்ளோமா (Diploma in Motor Vehicle Technology) வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிகள் City & Guild London Institute ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தில் வேலை செய்பவர்களுக்கு விசேஷ வகுப்புகள் ஒழுங்குசெய்யப்படும். அதிபர், உயர் கல்விக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் உடனே தொடர்புகொள்க. 8748

### வகுப்புகள்

புதிய வகுப்புகள் ஆரம்பம். விலங்கியல் வியாழன் 4-30 பி.ப. தாவரவியல் சனி 6-30 பி.ப. இரசாயனவியல் புதன் 3-45 பி. ப. பௌதிகவியல் செவ்வாய் 5 30 பி. ப. கில்னர் அக்கடெமி, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 8758

## சங்கானை ப. நோ. கூ. சங்க கீழ்மாடிக் கட்டிட திருத்த வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

மேற்குறிக்கப்பட்ட வேலைகளுக்கான கேள்விவிண்ணப்பங்கள் சங்கத்தலைவரால் 1978ம் ஆண்டு பங்குனி 27ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சங்கக்காரியாலயத்தால் வழங்கப்படும் பத்திரத்திலேயே கேள்விகள் யாவும் பூர்த்திசெய்யப்படல்வேண்டும். கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 5/ம், கேள்வி வைப்புப்பணமாக ரூபா 500/- செலுத்துதல்வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் சீல்வைக்கப்பட்டு உறையின் இடது பக்கமூலையில் வேலையின்பெயர் தெளிவாக எழுதப்பட்டு "தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும். மேலதிக விபரங்களை இச்சங்கத்தில் வேலை நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

கே. சி. லோகேஸ்வரன்
தலைவர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.
13-03-78. 8762

## கிரிக்கெட்

[அரியாலை]

யாழ்ப்பாணம் பரி யோவான் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

0 0 0

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி கிரிக்கெட் கோஷ்டிக்கும், யாழ்ப்பாணம் பரி யோவான் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

0 0 0

யாழ். மத்திய கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில், மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

0 0 0

யாழ்ப்பாணம் பரி யோவான் கல்லூரிக்கும், யாழ். இந்துக் கல்லூரிக்குமிடையில் பரி யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. (உ)

## சுங்க இலாகா பிரசித்த ஏலவிற்பனை தலைமன்னார்

கீழ்காணும் பொருட்கள் யாவும் பிரசித்த ஏலவிற்பனையில் 22-3-78 திகதி காலை 9-30 மணிக்கு தலைமன்னார் சுங்கஇலாகாவில் விற்கப்படும்.

இப் பொருட்களைப் பார்வையிட விரும்புவோர் 21-3-78 திகதி தலைமன்னார் சுங்க இலாகாவில் காலை பத்துமணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரைக்கும் பார்வையிடலாம்.

ஏலத்தில் பொருட்கள் வாங்குவதற்கு தகுதிபெற்றோர் ஏலத்தில் தாங்கள் கூடிய விலைகோரிப்பெற்ற பொருளின் முழு தொகையையும் உடனடியாகக்கட்டி பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏலவிற்பனையின் விதிகள் 28-5-54 திகதி அரசாங்க வர்த்தமானி இல. 10675இல் வெளியிடப்பட்டுள்ளது.

[ஒப்பம்] கையொப்பம்
கே பீ எல் பீ நாணயக்கார,
பிரதம சுங்க
சேகரிப்பாளருக்காக.

### பொருள் பட்டியல்

சலவை நீலம்
இறேந்தைகள்
காப்புகள்
ஊதுபத்திகள்
பேனைகள்
கைக்கடிகாரப்பட்டிகள்
புடவைச்சாயங்கள்
கைக்கடிகார
உதிரிப்பாகங்கள்
பென்சில்கள்
சயிக்கிள் உதிரிப்பாகங்கள்
தெறிவகைகள்
மயிர்மாட்டிகள் முதலியன. 8754

## 'ஜி. ஜி. மீது அமரர் குமாரசாமி வைத்திருந்த பற்று' இறுதி அஞ்சலியில் பிரஸ்தாபம்

[கொழும்பு]

சாவகச்சேரி முன்னாள் எம் பி அமரர் வி குமாரசாமியின் இறுதி ஊர்வலத்தில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கலந்துகொண்டார்.

பம்பலப்பிட்டியிலுள்ள இல்லத்தில் சாவகச்சேரி எம் பி திரு. வி என் நவரத்தினம், முன்னாள் தபாலமைச்சர் திரு செ குமாரசூரியர், முன்னாள் அமைச்சர் திரு கலுகல்ல, தமிழ்க்காங்கிரஸ் உபசெயலாளர் திரு. குமார் பொன்னம்பலம், தமிழ்ஈழ ஜீ ஜீ காங்கிரஸ் பொருளாளர் திரு கே இராமநாதன் மற்றும் தமிழ்காங்கிரஸ் வாலிபமுன்னணியினர் அஞ்சலிசெலுத்தினார்கள்.

பம்பலப்பிட்டியில் அவரது இல்லத்தில் நடந்த இறுதிச் சடங்கை தொடர்ந்து இறுதி யாத்திரை ஆரம்பமானது. நூற்றுக்கணக்கான அனுதாபத்தந்திகள் வந்திருந்தன.

இறுதிஅஞ்சலியின் போது அவரது சேவைகளை எடுத்துக் கூறினர்.

கீதையின் உட்பொருளை உணர்ந்து அவற்றை மனப்பாடம்செய்து வாழ்வை பயமின்றி செவ்வனவே நடத்தியவர் அமரர் குமாரசாமி. என முன்னாள் ஆசிரியர் திரு. ஆர். ரி சுப்பிரமணியம் கூறினார்.

திரு சுப்பிரமணியம் மேலும் கூறியதாவது: தமிழ்க்காங்கிரஸ் பிளவுபட்டு தமிழரசுக் கட்சி உதயமானபோது அமரர் குமாரசாமியின் சொந்த மாமனார் அமரர் டாக்டர் வி கே பரமநாயகம், தமிழரசு செயலாளராக விளங்கினார். அப்போது பலதடவை அவர் தமது மருமகனை தமிழரசுக் கட்சியில் சேர்ந்து 1952ம் ஆண்டில் போட்டியிடுமாறு கேட்டும் அமரர் குமாரசாமி ஜி ஜியை விட்டு விலகவிரும்பவில்லை. அதனால் மறுத்துவிட்டார்.

இசைமணி வி நடேசன், திரு அ ஆறுமுகம், சிவநாமம் பாட சைவாசாரமுறைப்படி இறுதிச்சடங்கு நடந்தது. பம்பலப்பட்டியிலிருந்து 4-15க்கு இறுதியாத்திரை புறப்பட்டு கனத்தை மயானத்தையடைந்தது.

## "குழைக்காட்டை செழிப்பு மிக்க பூமியாக மாற்றினார்"

[யாழ்ப்பாணம்]

"அமரர் குமாரசாமி எம். பி.யாக இருந்தபோது குழைக்காடாக இருந்த தென்மராட்சியை இந்திரலோகமாக்கினார். அவர் மறைவு, தமிழ் மக்களுக்குக் குறிப்பாகத் தென்மராட்சி மக்களுக்குப் பேரிழப்பாகும்."

தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் செயலாளர் திரு இ. ப.முதலியார் வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: முதன்முதலாக மகாவலி கங்கையை வடக்கே திருப்புவதற்காகப் பாடுபட்டார். அவர் கனவு இன்று நனவாகிவருகின்றது.

விவசாயத்துறையில் அவர் சிறந்து விளங்கியதால் அண்மையில் அவர் அகில இலங்கை விவசாயக் குழுவில் ஓர் உறுப்பினராகக் காணி அமைச்சரினால் நியமிக்கப்பட்டார்.

தமிழ்க் காங்கிரஸ் உபசெயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் கூறியிருப்பதாவது:

அமரர்குமாரசாமியின் மறைவினால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்பமுடியாது. காடாகக் கிடந்த தென்மராட்சியை நாடாக்கிய பெருமை அவரையே சாரும். 25 வருடங்களுக்கு முன் மகாவலிகங்கையை வடக்கே திசை திருப்பமுடியுமெனக் கூறியவரும் அவரே. அன்று போததில் கொண்டுவரப் போகிறாரா என்று எள்ளிநகையாடியவர்கள் இன்று 25 ஆண்டுக்குப் பின் அதனை ஏற்றிருப்பது

(5-ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்பில் இழுக்கப்பட்ட 54-வது இலக்க சுவீப்பில் முதல் மூன்று முடிவுகள்:

1-ம் பரிசு:
**18 S 0938**
ரூ 1,00,000

2-ம் பரிசு:
**38 A 0739**
ரூ 40,000

3-ம் பரிசு:
**22 F 0022**
ரூ 10,000

தலா 1,500 ரூபா வீதம் ஆறுதல் பரிசு பெறும் நூறு டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 12 A 0165 | 40 A 0798 |
| 46 A 0227 | 52 A 0304 |
| 15 B 0308 | 19 B 0818 |
| 41 B 0324 | 46 B 0761 |
| 49 B 0618 | 01 C 0203 |
| 04 C 0065 | 25 C 0867 |
| 30 C 0509 | 48 C 0270 |
| 06 D 0545 | 09 D 0749 |
| 12 D 0589 | 22 D 0727 |
| 25 D 0613 | 40 D 0986 |
| 54 D 0627 | 56 D 0231 |
| 03 E 0320 | 03 E 0855 |
| 09 E 0662 | 11 F 0897 |
| 13 F 0567 | 30 F 0011 |
| 37 F 0799 | 49 F 0622 |
| 26 G 0554 | 3 J 0406 |
| 33 J 0993 | 32 K 0364 |
| 38 K 0253 | 51 K 0993 |
| 53 K 0354 | 55 K 0683 |
| 56 K 0162 | 04 L 0494 |
| 47 L 0737 | 50 L 0696 |
| 58 L 0447 | 24 M 0290 |
| 33 M 0574 | 51 M 0128 |
| 59 M 0918 | 15 N 0323 |
| 17 N 0033 | 42 N 0771 |
| 28 O 0055 | |
| 46 O 0740 | 63 O 0417 |
| 08 Q 0451 | 10 Q 0370 |
| 24 Q 0274 | 36 Q 0739 |
| 60 Q 0687 | 02 R 0784 |
| 05 R 0541 | 39 R 0059 |
| 36 R 0032 | 42 R 0379 |
| 42 R 0896 | 01 S 0035 |
| 05 S 0754 | 13 S 0208 |
| 42 S 0509 | 46 S 0259 |
| 56 S 0914 | 11 T 0669 |
| 61 T 0778 | 25 U 0332 |
| 23 U 0439 | 50 U 03[illegible]2 |
| 50 U 0801 | 13 V 0804 |
| 34 V 0731 | 41 V 0129 |
| 01 W 0746 | 22 W 0910 |
| 26 W 0724 | 28 W 0010 |
| 42 W 0769 | 64 W 0245 |
| 05 X 0516 | 47 X 0754 |
| 04 Y 0082 | 12 Y 0131 |
| 18 Y 0672 | 53 Y 0781 |
| 58 Y 0659 | 59 Y 0293 |
| 61 Y 0217 | 63 Y 0458 |
| 64 Y 0491 | 12 Z 0622 |
| 21 Z 0531 | 37 Z 0834 |
| 50 Z 0691 | |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.)

## நூல் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் திரு. ஹவார்ட் டபிள்யூ. திக்கின்ஸ் இம்மாதம் 17-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை யாழ். பொதுசன நூல் நிலையத்திற்கு விஜயம்செய்து புத்தகங்களை அன்பளிப்பாக வழங்குவார்.

தூதுவருக்கு தேநீர் விருந்து பசாரமும் அளிக்கப்படும். [இ]


## சங்கரத்தை பத்திரகாளி அம்பாள் மகோற்சவம்

சங்கரத்தைப்பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் வருடாந்த மகோற்சவம் பங்குனி மாதம் 11-ம் திகதி (24-3-78) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 10-ம் நாள் தேர்த்திருவிழாவும் மறுநாள் கொடியிறக்கத்துடன் முடிவடையும். புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் 2-4-78 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். 2-4-78 ஞாயிற்றுக்கிழமை மாலை ரதோற்சவமும் நடைபெறும்.

ஆலய முகாமையாளர்கள்
8768

வெளிவந்துவிட்டது
பாலபோதினி
அரிவரிப்புத்தகம்
வண்ணச்சித்திரப்பதிப்பு
விலை ரூபா 2-25
சுன்னாகம்
தனலக்குமி
புத்தகசாலை

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஈழநாடு
The Eelanaadu

## நெசவுத் தொழில் விருத்தி

நெசவுத் தொழிலை விருத்தி செய்யும் பொருட்டு அதன் பல்வேறு பிரிவுகளையும் இணைத்துத் திட்டமிட்டுச் செயல்படுத்துவதற்கென ஒரு சபையை நிறுவுவதற்கு நெசவுத்துறை அமைச்சர் திரு. விஜயபால மென்டிஸ் தீர்மானித்திருக்கிறார்.

இது எப்பவோ செய்திருக்கவேண்டியது. இப்போதாவது இப்படியொரு சபையை அமைக்க அமைச்சர் முன்வந்திருப்பதைப் பாராட்டவேண்டும்.

நமது நாட்டில் பெரிய அளவிலான நெசவாலைகளிருக்கின்றன.

மின்தறிகள் இருக்கின்றன. கைத்தறிகளும்நிறைய இருக்கின்றன. நெசவுத் தொழில் தெரிந்தவர்களுக்கும் நமதுநாட்டில் குறைவில்லை.

நமது நாட்டில் நூல்நூற்கப்படுகிறது துணிஉற்பத்தி செய்யப்படுகிறது.

இவை யெல்லாமிருந்தும் இன்னமும் வெளிநாடுகளிலிருந்தே துணிகளை இறக்குமதி செய்கிறோம்,

துணி உற்பத்தியில் நாம் இன்னமும்சரியான தரத்தை அடையவில்லை.

சரியான திட்டமும் துணி உற்பத்தியில் பல்வேறு பிரிவுகளையும் இணைத்துச் செயல்படுத்தும் ஒரு அமைப்பும் இல்லாததே இதற்குக் காரணமாகும்

அருகேயுள்ள தமிழ் நாட்டில் நெசவுக்கலை சிறந்த வளர்ச்சியடைந்திருக்கிறது. சீனு, ஜப்பான் முதலிய நாடுகளிலும் நெசவுக்கலை பெரும் வளர்ச்சி யடைந்திருக்கிறது

இந்தநாடுகளின் தொழில் நுட்ப அறிவை நாமும்பெற வேண்டும். நமது நாட்டிலிருந்து சிலரை இந்த நாடுகளுக்கு அனுப்பி பயிற்சி பெற ஏற்பாடு செய்யலாம். அந்த நாடுகளிலிருந்து சில நிபுணர்களை இங்கு வரவழைத்து இங்குள்ளவர்களுக்குப் பயிற்சியளிக்கவும் ஏற்பாடு செய்வது நல்ல பயனைத்தரும்.

நெசவுத் தொழில் இங்கு ஏன் வளர்ச்சி பெறும்லிருக்கிறதென்பதை ஆராய்ந்து இனி அதை வளர்ச்சிபெறச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

நெசவுத் தொழிலுக்கு தேவையான நூலை நாம் இறக்குமதிசெய்து வருகிறோம். இங்கு பருத்தி உற்பத்தியில் இதுவரை அக்கறை செலுத்தப்படவில்லை.

அம்பாந்தோட்டை, மன்னார் பகுதிகளில் பருத்தி உற்பத்திசெய்யலாம். நமது நாட்டுக்குத் தேவையான பருத்தியை இங்கு உற்பத்தி செய்வதற்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது.

பருத்தி உற்பத்தி நூல் நூற்பு, துணி உற்பத்தி, துணிகளைச் சந்தைப்படுத்துதல், நெசவுநூல் விநியோகம், துணிகளின் தரம் ஆகிய சகல பிரிவு பற்றியும் ஆராய்ந்து திட்டமிட்டு நெசவுத்தொழிலை விருத்திசெய்தால் நாம் வெளிநாடுகளிலிருந்து துணிகளை இறக்குமதி செய்யவேண்டிய அவசியமில்லாது போய்விடும்.

நெசவுத் தொழிலை விருத்திசெய்வதால் இங்கு வேலையில்லாப் பிரச்னையையும் கணிசமான அளவு குறைக்கலாம்.

அமைச்சர் அமைக்கவிருக்கும் சபை இவைகளை ஆராய்ந்து சரியான முறையில் செயல்படுமென்று எதிர்பார்ப்போம்.

# “தமிழினத்தின் தனித்துவம் பேணும் நிபந்தனையற்ற சுயநிர்ணய உரிமை”

## செந்தமிழர் இயக்க. கொள்கை

## இதுவே என்கிறார் வி. பி.

[யாழ்ப்பாணம்]

“செந்தமிழர் இயக்கம், தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரத்தை - தனித்துவத்தைச் சமத்துவத்தின் அடிப்படையில் நிலைநிறுத்தும் வகையில் நிபந்தனையற்ற சுயநிர்ணய உரிமையைக் கோருகின்றது”

இவ்வாறு யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் நிகழ்ந்த செந்தமிழர் இயக்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் செந்தமிழர் இயக்கப் பொதுச்செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், “தமிழர்களின் பாரம்பரியத் தாயகமான தமிழ் ஈழப் பிரதேசத்தைப் பேணி, இப்பகுதியில் வந்து குடியேற விரும்பும் தமிழ் மக்களுக்குத் தடையாக உள்ள நிலைகளை அகற்றி, அவர்களுக்கு உதவுவதோடு, முழு நாட்டிலும் வாழ்ந்துவரும் தமிழ்பேசும் மக்களின் குடியுரிமை, கல்வி, தொழில், நிர்வாகம், நீதிபரிபாலனம் போன்ற துறைகளில் தாய் மொழியின் உபயோகத்திற்குச் சட்டரீதியான அரசியல் அங்கீகாரத்தையும் செந்தமிழர் இயக்கம் கோரிநிற்கிறது.

### வர்க்க-இன விடுதலைகள்

“வர்க்கப் போராட்டம் வெற்றிபெறின், தமிழ் உரிமை தானே நிலைபெறுமென்ற நம்பிக்கையின் அடிப்படையில் சித்தாந்தத் தவறிழைத்த இடதுசாரி இயக்கத்தின் குரலாக நான் வடக்கில் செயற்பட்டேன். இந்நிலையை மாற்றி வர்க்கப் போராட்டமும் இன விடுதலையும் ஒருங்குசேர இடம்பெறத் தகுந்த போராட்டம் தான் சரியான மார்க்ஸிச முடிவாகும் என்பதை இன்று சகலரும் ஏற்கத் தொடங்கியுள்ளனர். செந்தமிழர் இயக்கம் தமிழினத்தின் மரபுவழி உரிமைகளுக்கும், பொருளாதார சமத்துவத்திற்கும் ஒரே வேளையில் குரல் கொடுக்கும் -போராடும்.”

### ஜனநாயக சக்திகளுடன் இணைப்பு

“தமிழ்மக்கள் மத்தியிலுள்ள தமிழ்பேசும் மக்களின் விடுதலை இயக்கத்திற்காக முன்னின்று உழைத்துவரும் ஜனநாயகச் சக்திகளை மதித்து அவர்களுடன் ஒன்றிணைந்து இன விடுதலைக்கும் சமதர்மப் போராட்டத்திற்கும் உழைப்பது அவசியம். இது சாத்தியமும்கூட. தமிழர் விடுதலைக் கூட்டணியினர், தமது தேர்தல் திட்டத்தில் விஞ்ஞான ரீதியான சோஷலிஸத்தை ஏற்றுள்ளமையும், மத சார்பற்ற தமிழ் ஈழத்தை உருவாக்கத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரகடனப் படுத்தியிருப்பதும் இந்நிலைமையைச் சாத்தியமாக்கியுள்ளது.

### தென்னிலங்கையர் ஏற்கவேண்டும்

இந்நிலைப்பாட்டினைக் கருத்திற்கொண்டு, தென்னிலங்கையிலுள்ள இடதுசாரிச் சக்திகள் தமிழரைத் தேசிய இனமாக ஏற்று, அவர்களின் சுயநிர்ணய உரிமையை நிபந்தனையற்ற முறையில் ஏற்பதன் மூலம் அவர்களின் விடுதலைக்குத் துணை நிற்கவேண்டும்” என்றார்.

திரு. பொ. சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் முல்லைத்தீவு, மன்னார், மலையகம், கொழும்பு, மட்டக்களப்பு போன்ற பகுதிகளைச் சேர்ந்த பலரும் பங்குபற்றினர். திரு. சிவா. சுப்பிரமணியம் இயக்கத்தின் நோக்கங்கள் பற்றி விளக்கிக் கூறினார்.

### 9 பேர் கொண்ட குழு

இயக்கத்தின் வேலைகளில் துரிதமாக ஈடுபடுவதற்கென 9பேர் கொண்ட குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. திருவாளர்கள் வி. பொன்னம்பலம், சிவா. சுப்பிரமணியம், பொ. சந்திரசேகர், சி. யேசுதாசன், மா. செல்லத்தம்பி, க. தர்மலிங்கம், இ. இருஷ்ணன், அ. இவகுமாரன், இரா. புவனேந்திரன் ஆகியோர் இதிலடங்குவர்.

### சித்திரையில் மாநாடு

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் சித்திரை மாதம் 9ந் தேதி ஞாயிறு, செந்தமிழர் இயக்கத்தின் முதலாவது மாநாட்டை நடத்துவதெனக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. கடந்த காலத்தில் இடதுசாரி இயக்த்தின் அங்கத்தவராக, ஆதரவாளராக இயங்கி வந்த சுமார் 1.000 உறுப்பினர்கள் இதில் பங்குபற்றுவரென எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [இ-உ]

மாணவர்

## இன ஐக்கியம் தழைக்க உதவ வேண்டும்


[அரியாலை]

‘மாணவர்களிடையே பொறுப்புணர்ச்சியும், நேர்மையும் இன்று மிகவும் அவசியமாகிறது. பொறுப்புணர்ச்சியும் சகிப்புத்தன்மையும் இல்லாத காரணத்தால் சகோதரர்கள் போல வாழ்ந்த சிங்கள-தமிழ் மக்களிடையே கடந்த வருடம் இந்நாட்டிலே பயங்கரமான இனக்கலவரங்கள் ஏற்பட்டன. இது மிகவும் துக்கமான சம்பவமாகும். இப்படியான கலவரங்களினால் நாட்டின் முன்னேற்றம் மிகவும் பாதிக்கப்படுவதுடன் இந்நாட்டில் வாழும் மக்களிடையே கசப்புணர்ச்சி அதிகமாக வளர்ந்து பொறுப்புணர்ச்சி குறைந்துவிடுகிறது. நாட்டு மக்களிடையே ஐக்கியத்தையும், நேர்மையையும், பொறுப்புணர்ச்சியையும் வளர்க்க இந்நாட்டிலுள்ள கல்லூரிகளில் கல்வி கற்கும் உயர் வகுப்பு மாணவர் முயற்சி எடுக்கவேண்டும்.’

இவ்வாறு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற தேநீர் விருந்துபசாரமொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வைத்தியகலாநிதி கணேசரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார்.

மாணவர் மன்றத் தலைவர் செல்வன் சி. தவமோகன் தலைமையில் இவ்வுபசாரம் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திரு. வே. எஸ். அரியரத்தினம் பேசுகையில் ‘கல்லூரிகள் இந்நாட்டிற்குச் சிறந்த கல்விமான்களைகளை மட்டுமல்ல நல்ல ஒழுக்கமுள்ள’ சகிப்புத்தன்மையுள்ள ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் தன்மையுள்ள நல்ல பிரஜைகளை உருவாக்கவேண்டும். ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டில் கல்வி பெறும் மாணவ-மாணவிகள் ஒழுக்கத்திலும், கட்டுப்பாட்டிலும் தான் தங்கியுள்ளது கல்லூரிகளின் வளர்ச்சி அங்கு கல்வி பெறும் மாணவ-மாணவிகளில் மட்டுமல்லாமல் பெற்றோர்-பழைய மாணவ, மாணவியர்களின் பூரண ஒத்துழைப்பிலும் தங்கியுள்ளது என்று குறிப்பிட்டார். போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு திருமதி கணேசரத்தினம் பரிசில்கள் வழங்கினார். (உ.)



சினத்தை அன்பாலும் தீமையை நன்மையாலும் பொய்யை மெய்யாலும் வெல்லவேண்டும்.

—புத்தர்பிரான்

## “பரிசுத்தம் என்பது என்ன?”

[யாழ்ப்பாணம்]

“நீராடுவதனுல் பரிசுத்தம் ஏற்படுவதாயின் 24 மணி நேரமும் நீருக்குள்ளேயே வாழும் நண்டும், தவளையும் பரிசுத்தமானவையே என்று கருதவேண்டும் அல்லவா? காட்டில் வாழ்வதோ, காய் கனி உண்பதோ, குகையில் வசிப்பதோ, பட்டினி கிடப்பதோ தவம் ஆகாது’

வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் தினமும் விரிவுரையாற்றிவரும் பிரம்மஸ்ரீ வைத்தியானந்தசர்மா பாகவதர் வில்லிபாரத விரிவுரையின் போது மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

அர்ச்சுனன் என்ற சொல்லுக்கு பரிசுத்தமானவன் என்பது பொருள். பரிசுத்தம் என்பது உடம்பினுல் அமைவதில்லை. நீராடினுல்தான் பரிசுத்தம் என்பதும் இல்லை. மனதிலே உள்ள அழுக்குகளை தியானம் என்ற தண்ணீரில் கழுவவேண்டும் வாக்கில் வரும் அழுக்குகளை துதி என்ற தண்ணீரினுல் கழுவவேண்டும். உடம்பினுல் ஏற்படும் அழுக்குகளை அர்ச்சனை என்ற தண்ணீரினுல் கழுவுதல்வேண்டும். எனவே மனம், மொழி, மெய் என்ற மூன்றிலும் தூயவன் அர்ஜுனன்” என்றார். (உ)

ஆசிரியருக்கு கடிதம்:

## வெளிச்சமின்றி சைக்கிள் செலுத்துவோரின் தொல்லை

இரவு வேளைகளில் வெளிச்சம், மணி இன்றி சைக்கிளை செலுத்துவோரால் ஏற்படும் தொல்லை எல்லை மீறிவிட்டது.

இதனுல் பல விபத்துக்கள் ஏற்படுவதுடன் பாதசாரிகளுக்கும், சைக்கிள் காரர்களுக்கும் இடையில் வாக்குவாதமும், மோதலும் ஏற்படவும் கூடிய விசனமான நிலையும் ஏற்படுகிறது.

மின்சாரம் தடைப்படும் நேரங்களில் நிலைமையைக் கேட்கவே வேண்டாம்.

வெ. சு. நடராஜா
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

## ‘விஸ்வமடு அகதிகளுக்கு மாற்றுக்காணி வழங்குக’

### செல்லத்தம்பு எம். பி.

(விஸ்வமடு)

விஸ்வமடுவில் அகதிகள் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட தலா இரண்டு ஏக்கர் காணிகளில் நீர்வசதியற்ற காணிகளுக்கு மாற்றுக்காணிகள் வழங்கப்படவேண்டுமென முல்லைத்தீவு எம் பி திரு. சே. மா. செல்லத்தம்பு யாழ் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கேட்டுள்ளார்.

அகதிகள் பிரச்னைகள் பற்றி யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜெகநாதன் தலைமையில் ஓர் உயர்மட்ட மாநாடு விசுவமடு நலன்புரி மண்டபத்தில் நடைபெற்றது. திரு. செல்லத்தம்பு, கோப்பாய் எம். பி திரு. கதிரவேலுப்பிள்ளை, மாவட்ட அதிகாரி திருவாளர்கள் எம் எம் மக்லூல், தம்பிமுத்து, விஜயசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இம் மாநாட்டில் அகதிகளின் பங்கீட்டு உணவுகள், பாடசாலை வசதி, குடிநீர் வசதி சுகாதாரவசதி ஆகியன ஆராயப்பட்டன. நீர்மட்டம் சுமுகமாக உள்ள காணிகள் வழங்கப்பட்ட அகதிகளுக்கு அக் காணிகளை மாற்றி புதிய காணிகள் தெரிவுசெய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. (உ)

## “குறளுரைகள் மேலும் வேண்டும்”

[கிளிநொச்சி]

“தமிழர்கள் மேற்குல விஞ்ஞான வளர்ச்சியுடன் இன்றையநிலையில் போட்டியிட்டு முன்னேற முடியாதவர்களாக இருப்பினும், காலத்தால் அழியாத இலக்கியச் செல்வங்களைப் பெரும் பொக்கிஷங்களாகக் கொண்டுள்ளனர். அவ்வகையில், திருக்குறள் அவர்களுக்குக் கிடைத்த மதிப்பிடற்கரிய பெரும் சொத்தாகும். திருக்குறளுக்குப் பல உரைகள் தோன்றிவிட்டன. எனினும் அந்நூலின் மகிமையை அவை முற்றுமுழுதாகப் புலப்படுத்துகின்றன எனக் கூறுவதற்கில்லை. அந்நூலின் பெருமையைப் புலப்படுத்த புதிய உரைகள் பல தோன்றவேண்டும்”

மேற்கண்டவாறு இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகத் தமிழ்த்துறை விரிவுரையாளர்

4-ம் பக்கம் பார்க்க]

**நாகம்மஸ்**
[கன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
எம். ஜி. ஆர். — லதா
நடித்த
**நினைத்ததை முடிப்பவன்**

**Rio** Jaffna (Phone: 7607)
Daily 4 Shows
JACK PALANCE in
**Welcome To Blood City**
(Color-Western-Scope)

**வெல்லி**
(சாவகச்சேரி)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
சிவகுமார் — ஜெயசுதா
**பட்டிக்காட்டுராஜா**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45,
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த் - ஸ்ரீதேவி
**மூன்று முடிச்சு**

**ராஜா** [கடைசி வாரம்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார்
நடித்த
**மேயர் மீனாட்சி**

இன்றுமட்டும் தினசரி 4 காட்சிகள்
**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
ஜெமினி, பத்மினி, ராதா
நடித்த
**சித்தி**
[புதிய பிரதி]

**Regal** (Jaffna) Daily 4-45, 7-00 & 9-45 p.m.
**SPANISH FLY** (Color)

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி-பத்மினி நடித்த
**பாலாடை**
—புதிய பிரதி—

நிதியுதவிக் காட்சி: கைதடி/வளர்மதி ச. ச. நிலைய பத்திற்காக 18-3-78 பி. ப, 2-30க்கு 'மருத நாட்டு வீரன்' இதற்காக முன்னர் விற்பனையான டிக்கட்டுகள் செல்லுபடியாகும்.

**ராணி** [யாழ். நகர்]
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் - ஜெய்சித்திரா
நடித்த
**பணக்கார பெண்**
புதிய ஜனாதிபதி அவர்களின் பதவியேற்பு வைபவ காட்சிகளும் காண்பிக்கப்படும்.

**வின்ஸா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா,
விஜயகுமார்-நிர்மலா, அசோகன் மனோரமா
நடித்த
K. R. G. பிக்சர்ஸ்
**ஜானகி சபதம்**

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
**பொலீஸ்காரன் மகள்**

17-3-78 முதல் **இருகப்பிரவேசம்**

**லிடோ** (யாழ். நகர்)
போன் 7698
முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
**உறவு சொல்ல ஒருவன்**


# ஆயுத முனையில் அமெரிக்க விமானம் கடத்தல்

கலிபோனியாவில் சம்பவம்

## கடத்தல்காரர் மன நோயாளியாம்

ஒக்லண்ட், மார்ச் 14 68 பிரயாணிகளுடன் சென்ற அமெரிக்க விமானம் ஒன்று கலிபோனியாவில் துப்பாக்கி ஏந்திய ஒருவரால் கடத்திச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

போயிங்-727 என்ற இந்த விமானம் வானில் வைத்து ஆயுத முனையில் பலவந்தமாகத் திசைதிருப்பி ஒக்லண்ட் விமான நிலையத்தில் இறக்கப்பட்டது.

அங்கு சகல பிரயாணிகளும் விடுவிக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து விமானப் பணியாளர் ஐவருடனும் கடத்தல்காரருடனும் விமானம் புறப்பட்டுச் சென்றதாம்.

### மனநோயாளி

இவ் விமானத்தைக் கடத்தியவர் ஒரு மனநோயாளி என்று கருதப்படுகிறது.

# இந்திய சீன பூசல் தற்காலிகமானது நட்புறவே நிரந்தரம்

## சீன வர்த்தகக் குழுத் தலைவர் புதுடில்லியில் கருத்து

புதுடில்லி, மார்ச் 14 சீன-இந்திய பூசல்கள் தற்காலிகமானவையே. இரு நாடுகளுக்குமிடையே உள்ள நட்புறவு தான் நிரந்தரமானது.

இவ்வாறு இந்தியா வந்துள்ள சீன வர்த்தகக் குழுவின் தலைவர் திரு. வாங் பின் ஙி புதுடில்லியில் தெரிவித்தார்.

இந்திய ஆட்சிமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் சகல கட்சி எம். பிக்களும் கலந்து கொண்டனர்.

இந்திய-சீன மக்கள் நண்பர்கள் மட்டுமல்ல சகோதரர்களும்கூட. நம்மிடையே இனிமேல் பூசல்கள் எதுவுமே கிடையாது, என்றும் அவர் கூறினர். (இ)

# 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய ஆலயம்

பூஜாஸ்தானத்தில் சூரிய முகங்களைக் கொண்ட திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன

அல்மா அதா, மார்ச் 14 வெங்கலக் காலத்தைச் சேர்ந்ததெனக் கருதப்படும் புராதன ஆலயமொன்றினை அல்மா அதாவுக்கு வடமேற்கேயுள்ள சூ-லீ மலைப் பிரதேசத்தில் தொல்பொருளியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த ஆலயத்தின் அளவினையும் கலைத்துவ மகிமையையும் பொறுத்தளவில் யூறேஷியாவில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட புராதன கலைச்சின்னங்களில் இது மிகவும் அரியதான ஒன்ருக உள்ளதாக கஸாக் தொல்பொருளியலாளர்கள் கருதுகின்றனர்.

ஆலயத்தின் மத்தியில் நிறுதிட்டமான தளத்தின் மீது அமைந்துள்ள பாரிய

இந்த ஆலயம் ஏறத்தாழ 3,000 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டிருக்கவேண்டுமெனத் தொல்பொருளியலாளர்கள் கருதுகின்றனர். (இ)

# ஒல்லாந்து அரச கட்டிடம் ஒன்றில 70 பேர் பணயம்!

## கைதிகளை விடுவிக்க கோரிக்கை

அம்ஸ்டர்டாம், மார்ச் 14 ஒல்லாந்து அரசாங்கக் கட்டிடம் ஒன்றில் 6 துப்பாக்கி ஏந்திய தென்மொலுக்கர் இனத்தவர்கள் 70 பேரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர்.

டச்சுச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தென்மொலுக்கர்களை உடன் விடுதலைசெய்யவேண்டுமென்ற கோரிக்கை உட்படப் பல கோரிக்கைகளை இவர்கள் விடுத்துள்ளனர்.

பணயக் கைதிகளில் ஒருவருக்கும், துப்பாக்கி வீரர்களுக்குமிடையே எழுந்த தகராறினால் பணயக்கைதி ஒருவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டுள்ளாரென்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

## புதிய அதிபர்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கல்விக்கந்தோரில் கடமையாற்றிய திரு எஸ். சிவப்பிரகாசம் செங்குந்தா மகாவித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். [ஏ]

......

## மருந்து விநியோகம்

[வண்ணார்பண்ணை]

கோண்டாவில் மேற்குப் பகுதி விவசாயிகளின் தேவைகளை முன்னிட்டும், இவர்களது நலன்களுக்கு உதவும் வகையிலும் கோண்டாவில் மேற்கு மக்கள் முன்னேற்றக்கழகம் விவசாய ரசாயனப் பொருட்களையும், மருந்து வகைகளையும் எடுத்து விநியோகித்துவருகிறது. விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படுவதைக் குறைக்கும் முகமாக இக்கழகத்தினர் இவற்றை விநியோகித்துவருகின்றனராம். (உ)

## தந்திக் கம்பி திருட்டு

[மட்டுவில்]

தச்சன் தோப்பிற்கும் சாவகச்சேரிக்குமிடையில் இனந்தெரியாத நபர்களால் 720 ரூபா பெறுமதியான தந்திக் கம்பிகள் திருடப்பட்டுள்ளன. இதுகுறித்து சாவகச்சேரி பொலிஸ் சார்ஜன்ட் எஸ். நவரெட்னம் புலன் விசாரணை செய்து வருகின்ருர். (உ)

• • •

## நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

வண்ணை வட கிழக்கு கிராம சேவகர் பிரிவுத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளைக்கு திரு இ. நாகராஜா தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். உப தலைவர்களாக திரு கே. பேரம்பலம் ஏ. எஸ். தியாகராசா ஆகியோரும், செயலாளராக திரு த. சண்முகராசா, உப செயலாளராக திரு. க. விவேகானந்தன் ஆகியோரும், பொருளாளராக எம். என். சின்னத்துரையும் தெரிவுசெய்யப்பட்டனர்,

9 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவானது நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். (சி-உ)

## அன்னதானம் வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

மகாசிவராத்திரியை ஒட்டி திருக்கேதீஸ்வர புகையிரத தொண்டர் சபை திருக்கேதீஸ்வர புகையிரத நிலையத்தில் யாத்திரிகர்களுக்கு அன்னதானம் வழங்கினர்

மதவாச்சி புகையிரதநிலையத்திலும் இச்சபை யாத்திரிகர்களுக்கு நீராகாரம்வழங்கியது. மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா, எஸ். ஆர். இராஜதுரை, திரு சி. சின்னத்துரை ஆகியோர் சபைக்கு நிதி பொருளுதவி செய்திருந்தனர். [இ]

## வெற்றி

[திருமதி]

திருகோணமலை இந்துக்கல்லூரிக்கும் புனித சூசையப்பர் கல்லூரிக்குமிடையில் நடந்த இரண்டாவது கட்ட உதைபந்தாட்டப் போட்டியில் திருமலை புனித சூசையப்பர் கல்லூரி 5 0 கோல்களால் வெற்றியீட்டியது.

## குறளுரைகள்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. துரைமனோகரன் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வள்ளுவர் விழாவிற் பிரதமபேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். இவ்விழாவிற்கு மகாவித்தியாலய அதிபர் திரு. மகாலிங்கம் தலைமைதாங்கினர். (ம-உ)

துன்னாலை கொலை முயற்சி வழக்கு

# 2ம் எதிரி கட்டிப்பிடிக்க 1ம் எதிரி வெட்டினார்

[யாழ்ப்பாணம்]

'நான் கள்ளு கோப்பரேஷன் பக்கம் போனேன். 1ம் எதிரி பாளைக் கத்தியுடன் வந்தார். 2ம் எதிரி உன்மாமனை அடித்து வாட்டில் போட்டிருக்கிறோம். உன்னையும் பார்க்க போறோம்' என்றார். நான் பயத்தால் ஓடினேன் 2ம் எதிரி முன்னால்வந்து கட்டிப்பிடிக்க 1ம் எதிரி வெட்டினார்"

துன்னாலை கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த வேலன் இராசதுரை மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் நேற்றுவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 75 மார்ச் 26ம் தேதி துன்னாலையில் வல்லி செல்லன் அல்லது ராசா வேலுப்பிள்ளை சிவலிங்கம், கு. பாக்கியநாதன், நாகன் கந்தையா ஆகியோர், வேலன் இராசதுரையை கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம் சட்டத்தரணி கே. பி. எஸ். வரதராசா, சட்டத்தரணி எஸ். சுரேந்திரன் ஆகியோர் ஆஜரானார்கள். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர் ஐ. கனகரத்தினம்வழக்கை நடத்தினார்.

வேலன்இராசதுரை சாட்சியமளிக்கையில் கூறியதாவது: எதிரிகளைத் தெரியும் மச்சான் வீட்டில்வேலைசெய்தேன் வேலை செய்த பணத்தை வாங்கப் போனேன் அவர் அங்கில்லை என்று மனைவி சொன்னார் பின் கள்ளுக் கோப்பரேஷனுக்குப் போனேன். அப்போது சம்பவம் நடந்தது.

2ம் எதிரி முன்னால் கட்டிப்பிடிக்க 1ம் எதிரி வெட்டினார், பின் வெட்ட ஓங்க நான் கையைக் கொடுத்தேன். இரத்தம் ஓடியது களைப்பில் விழுந்து விட்டேன் பின் ஆஸ்பத்திரியில் மயக்கம் தெளிந்தது.

நீதிபதி: ஏன் வெட்டினார்?- என் மாமாவிற்கு 2ம் எதிரி முதல் நாள் அடித்தார் ஏன் அடித்தாய் என்று நான்போய் பேசினேன்.

இராசதுரை தொடர்ந்து கூறியதாவது: 3ம் எதிரி கம்பியும், 4ம் எதிரி கொட்டனும் வைத்திருந்தார். அவர்கள் ஒன்றும் செய்யவில்லை 3ம் எதிரி வெட்டடா" என்றார் 4ம் எதிரி ஒன்றும் சொல்லவில்லை.

நீதிபதி: 2ம் எதிரி 1ம் எதிரியின் சொந்தக்காரரா?-மச்சான்.

நீதிபதி: மற்றவர்கள்? அவரின் சொந்தக்காரர்கள்.

சட்டத்தரணி வி. என்.: 1ம் எதிரிக்கு வெட்டுக்காயம் ஏற்பட்டது தெரியுமா?- தெரியாது.

சட்: வி. என். இப்பதெரியுமா?-ஆம்.

1ம் எதிரி வல்லி செல்லன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சம்பவதினம் நான் கோப்பரேசனுக்கு கள்ளு கொண்டு போனேன் போகும் போது முட்டிகட்டியிருந்தேன் அப்போது அருமைத்துரை கத்தியால் தலையில் வெட்டினார் நான் தலையை பிடித்தபடி சாய, 2ம் வெட்டு கையில் விழுந்தது வேலன் இராசையா விழுந்து விடாமல்பிடித்தார். அதன் பின் ஒன்றும் தெரியாது.

சட். வி. என்: அருமைத்துரைக்கும், கதிர்காமத்தம்பிக்கும், வேலன் இராசதுரைக்கும் எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஒருவழக்கு இருக்கிறது?-ஆம்

சட் வி என்: இது யாருடைய சாரம்?- என்னுடையது எப்படி வந்ததென்று தெரியாது 2ம், 3ம், 4ம், எதிரிகளை சம்பவம் நடந்த இடத்தில் நான் காணவில்லை.

அரச சட்: வேலன் இராசதுரை என்ன செய்தார்?- விழாமல் பிடித்தார்.

நீதிபதி: உதவிசெய்ய பிடித்தாரா பாதகம் செய்ய பிடித்தாரா?- என்ன என்று தெரியாது.

அரச சட்டத்தரணி ஆர் ஐ கனகரத்தினம் தொகுப்புரை ஆரம்பித்தார். இன்று விசாரணைதொடர்ந்து நடைபெறும் [ ]

ஜி. சி. ஈ. பழைய பாடத்திட்ட

# மாணவர்களுக்கு ஆகஸ்டில் மட்டுமே பரீட்சை

(கொழும்பு)

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் பழைய பாடத்திட்டத்தின் கீழ் தோற்று பவர்கள் இனிமேல் ஆகஸ்ட் மாதத்தில் மட்டுமே பரீட்சை எடுக்கலாம். இவர்களுக்கு மார்கழிப் பரீட்சை நடத்தப் படமாட்டாது.

முன்னர் என். சி. ஜி. ஈ. வகுப்பில் படித்து, தற்சமயம் ஜி. சி ஈ. பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டியிருப்பவர்களுக்குப் புதிய பாடத் திட்டத்தின் கீழ் டிசம்பரில் பரீட்சை நடாத்தப்படும்.

இத்தகவலைப் பரீட்சை ஆணையாளரும், மேலதிகக் கல்வி மா அதிபருமாகிய திரு. பி. பி. ரத்நாயக்கா தெரிவித்துள்ளார். (ப-இ)

## இளம் தாயின் பரிதாப முடிவு

(காலி

இரட்டைக் குழந்தையைப் பெற்றெடுத்த சந்திரவதி என்னும் 25 வயதுப் பெண் ஆஸ்பத்திரிக் கட்டிலிலிருந்து தவறி விழுந்து ஸ்தலத்திலேயே மரணமானார். இச்சம்பவம் காலி அரசினர் ஆஸ்பத்திரியில் இடம்பெற்றுள்ளது. விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

## ஆசிரியர் இல்லையாம்

(பூநகரி)

பூநகரி நல்லூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் இன்மையால் மூடப்பட்டிருக்கிறதாம். (உ)

## குழைக்காட்டை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரது அரசியல் தீர்க்கதரிசனத்தைக் காட்டுகிறது.

அவரது காலத்தில், இதன் மராட்சியில்கட்டப்பட்டபாடசாலைகள் ஆஸ்பத்திரிகள், தபால் கந்தோர்கள் இன்னும் பல அரசாங்க கட்டடங்கள் அவர் செயல் திறமைக்கு சான்றுபகர்கின்றன.

அமரர் குமாரசாமியின் மறைவு குறித்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் அஞ்சலி செலுத்தப் பட்டதுடன் பரிசளிப்புடன் விழா முடிவடைந்தது. சாவகச்சேரி மகளிர் கல்லூரி நேற்று முன்தினம் அன்னாரின் மறைவுக்காகவிடுமுறை விடப்பட்டது. (க)

## தரமுயரும்

(கொழும்பு)

ரத்மலானை விமான நிலையம் சர்வதேச விமானநிலையமாகும்.

இதற்கான நிருமாண வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளன. (ம)

# தமிழின விடுதலைப்போரில் சிறுபான்மைத் தமிழர் பங்கு

## அளவெட்டியில் 'அமிர்' விளக்கம்

(யாழ்ப்பாணம்)

'தமிழினம் தமது இலட்சியத்தை வென்றெடுத்து விடுதலைபெற்ற இனமாக இந்நாட்டில் வாழ்வதற்கு சிறுபான்மைத் தமிழர்களும் தங்கள் பங்கைச் செலுத்தவேண்டும் அதே நேரத்தில் தங்கள் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு எங்கள் இயக்கத்துடன் ஒன்றுபட்டு ஒத்துழைக்கவேண்டியது அவசியமாகும். கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் வேலைவாய்ப்புகளை வழங்கும் விடயத்தில் பொருளாதாரம், கல்வி ஆகிய துறைகளில் பின்தங்கியிருக்கும் சிறுபான்மைத் தமிழ்ச் சமூக மக்களுக்குக் குறிப்பிட்ட நியாயமான அளவு இடங்களை ஒதுக்குவதற்குத் தீர்மானித்துள்ளனர்'

இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவரும், காங்கேசன்துறைத் தொகுதி எம்.பி.யுமான திரு. அ. அமிர்தலிங்கம் அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தவர் திரு. க. தம்பித்துரை தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

'எமது இயக்கம் சிறுபான்மைத் தமிழ் மக்களின் நலன் கருதி நீண்டகாலமாக பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளதைச் சகலரும் நன்கு அறிவார்கள். வட்டுக்கோட்டைக் கூட்டணி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சிறுபான்மைத் தமிழ் சமூகத்தினரின் குறைபாடுகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. கிராமங்களில் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வரும் சிறுபான்மைத் தமிழ் மக்களை எதிர்நோக்கும் சமூக, மத கல்வி. பொருளாதார, தொழில் வாய்ப்புப் போன்ற விடயங்களில் நாங்கள் முக்கிய கவனம் செலுத்தி வருகின்றோம். கிராமங்கள் தோறும் இம்மக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சனைகளை நேரடியாக அறிந்து தீர்த்துவைப்பதற்கும் திட்டமிட்டுள்ளோம். அவசியம் ஏற்படின் சமூகக்குறைபாடுகளை நீக்க ஒரு வெகுஜன இயக்கத்தை ஆரம்பிக்கவும் நாம் தயாராக இருக்கவேண்டும்.'

'தமிழ் இனம் அடிமையாக இருந்தபோது தன் இனத்துக்குள் ஒரு பகுதியினரை அடக்கி வைத்திருந்து வந்துள்ளது. இன்று தமிழ் இனம் விடுதலை பெறப் போராடுமுன் அந்த சிறுபான்மை மக்களுக்கு விடுதலை கிடைக்கச் செய்ய வேண்டும்.'

தமிழ் இனம் தேர்தல் மூலம் பெரிய பிரச்னை ஒன்றில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இனம் விடுதலை பெறவேண்டும். அதற்கு முன் எம் இனத்துக்குள் உள்ளவர்களுக்கு விடுதலை கிடைக்கவேண்டும். ஒரு இனம் ஒரு பகுதியினரை விட்டு விடுதலைபெறமுடியாது எல்லா மனிதரும் விடுதலை பெறவேண்டும். இப்படியான நிலை தொடர்ந்தும் இருக்க அனுமதிக்கக்கூடாது.

தமிழ் மக்கள் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டதைப் பார்த்து நாம் எல்லோரும் உணர்ச்சி வசப்படுகிறோம். ஆனால் எம் இனத்துக்குள் இருப்பவர்கள் படும் கஷ்டத்தைப் பார்த்து உணர்ச்சி வசப்படாமல் இருக்கிறோம். இந்தப் பிரச்னை மாறவேண்டும்.

அடுத்துப் பேசிய உடுப்பிட்டித் தொகுதி எம். பி. திரு. ரி. இராசலிங்கம் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

'சிறுபான்மைத் தமிழர்களாகிய நாங்கள் தமிழினம் நடத்தவுள்ள இன விடுதலை இயக்கத்தில் எமது பங்கைச் செலுத்தி ஒத்துழைக்கும் போதுதான் எமது உரிமைகளைப் பெறத் தகுதியுடையவர்களாவோம். கடந்த 30 ஆண்டுகாலமாக எமது சமூகப் பிரமுகர்கள் சிங்கள அரசாங்கங்களுடனும் சிங்களக் கட்சிகளுடனும் ஒத்துழைத்து பெற்ற உரிமை எதுவுமில்லை என்றே சொல்லவேண்டியுள்ளது. எமது தமிழினம் மேலும் பிளவுபடவேண்டுமென்பதே தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் நோக்கமாகும். இதை எமது சகோதரர்கள் நன்கு உணரவேண்டும்.

எங்கள் தலைவர் திரு. அமிர்தலிங்கம் துணிவோடும், இயக்க சுத்தியோடும் சாதி அமைப்பைத் தகர்த்தெறியச் செய்ய மேற்கொள்ளும் முயற்சிகள் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குப் பெரிதும் நம்பிக்கையூட்டுவனவாக இருக்கிறது. எமது சமூகம் தமிழினத்தின் ஒரு பிரிக்கமுடியாத அங்கமென்பதை உணர்ந்து தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட நாம் தயாராகவேண்டும்']

செந்தமிழர் இயக்கச்செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் உரையாற்றுகையில், 'சமதர்ம சமுதாய அமைப்பில் எந்தவிதமான சாதி அமைப்புகளும் இருக்கமுடியாது. பொருளாதாரத்துறையில் சகல மக்களும் சமமான வாய்ப்புகளைப் பெறும்போது இந்த அமைப்புகள் தானாகவே இல்லாது ஒழிக்கப்பட்டுவிடும்' என்று குறிப்பிட்டார்.

[மண்-மானி. நி.-இ]

# யாழ். ரோட்டரி நடத்தும் சிறந்த நடத்துநர் தெரிவு

இன்று இலட்சோப லட்சம் மக்களின் நாளாந்த இடப்பெயர்ச்சிக்கு ஜீவநாடியாகத் திகழ்வது இலங்கைப் போக்குவரத்துச்சபை என்றால் மிகையாகாது. இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவை சிறப்பதற்கு உயிரோட்டமாக திகழ்பவர்கள் பஸ் நடத்துநர்கள். பஸ் நடத்துநர்கள் சிறந்த முறையில் சேவை செய்தால் சபைக்கும் மக்களுக்கும் பேருதவியாக அமையும்.

பஸ் நடத்துநர்களை மக்கள் பணியில் மேலும் ஊக்கப்படுத்தி உற்சாகமளிக்கும் நோக்கமாக 'சிறந்த பஸ் நடத்துநரை' தெரிவுசெய்து அவர்களுக்கு தங்கப் பதக்கம், வெள்ளிக்கிண்ணம் போன்ற பல அரிய பரிசுகளை அளிக்க யாழ். ரோட்டரிக் கழகம் முன்வந்துள்ளது.

புதுவருடப் பரிசுப் போட்டியாக நடக்கும் இப்போட்டியில் சிறந்த முறையில் சேவை செய்யும் பஸ் நடத்துநரை தெரிவு செய்யும் உரிமையை பொதுமக்களிடமே ரோட்டரிக் கழகம் விட்டுள்ளது.

எனவே கீழ்க்காணப்படும் கூப்பனில் பொதுமக்கள் தங்களுக்கு சிறந்த முறையில் சேவைசெய்யும் பஸ் நடத்துநரின் பெயரைக் குறித்து இன்றே யாழ். ரோட்டரிக் கழகத்திற்கு தங்கள் தீர்ப்பை அறிவிக்கவேண்டும்.

இது பொதுமக்கள் தங்கள் சமுதாயத்திற்கு ஆற்றும் கடமையும்கூட. மறந்துவிடாதீர்கள். முடிவுதிகதி 4-4-78.

நடத்துநரின் பெயர்........................................

பதிவு இலக்கம்........................

அனுப்புபவரின் பெயர் ........................................

அனுப்புபவரின் விலாசம்........................................

திகதி ........................ ........................................

ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து பூர்த்தி செய்து டாக்டர் பா. சோ. பாரதி, 24, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக்கப்படும். (இ)

# திருநெல்வேலி வங்கிக்கொள்ளை வழக்கு

# பொலிஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் 5 பேருக்கு வாரண்ட்!

(யாழ்ப்பாணம்)

**திருநெல்வேலி கிராமிய வங்கிக் கொள்ளை வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறிய 5 சாட்சிகளுக்கு யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் வாறண்ட் பிறப்பித்தார்.**

இவ் வழக்கில், திருநெல்வேலி கிராமிய வங்கி முகாமையாளர் நல்லதம்பி அருணாசலம் வசமிருந்த கொள்ளையடிக்க முயற்சித்ததாகவும் வேம்பிராயில் வைத்து வேலுப்பிள்ளை விஜயரத்தினத்தின் காரை கடத்தியதாகவும், செல்லையா தனபாலசிங்கம் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 5 சாட்சிகள் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்று நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறிய சாட்சிகளான யாழ். இ. போ. ச. டிப்போ அத்தியட்சகர், கு. மகாலிங்கம், நாவலப்பிட்டி பொலிஸ் இன்ஸ்பெக்டர் சிவரத்தினம், சங்கானை பொலிஸ் கன்ஸ்டபிள் மாணிக்கவாசகர், யாழ். சிறைச்சாலையை சேர்ந்த பீட்டர்சன், வி. பாலசிங்கம் ஆகியோருக்கு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

இ. போ. ச. அத்தியட்சகர் மகாலிங்கம், தான் உத்தியோக அலுவல்கள் குறித்து கொழும்பு செல்வதாகவும், எனவே வழக்கு விசாரணையில் கலந்து கொள்ள முடியாமல் இருப்பதாகவும் தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

'உத்தியோக கடமையிலும் பார்க்க நீதிமன்ற அலுவல்கள் முக்கியமானவை' என்று நீதிபதி தெரிவித்தார்.

இன்ஸ்பெக்டர் சிவரத்தினம் அனுப்பிய வைத்திய அத்தாட்சிக் கடிதம், நீதிமன்றம் கலைந்தபின் வந்து சேர்ந்தது.

சாட்சிகள் வராததினால் நீதிபதி இவ்வழக்கை மே மாதம் 15-ம் தேதி வரை ஒத்திவைத்தார்.

## மல்லி பருப்பு விநியோகம்

[கொழும்பு]

பாவனையாளர்கள் போதுமான அளவு மல்லி, மைசூர்ப் பருப்பு ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இவற்றைப் போதுமான அளவில் இறக்குமதி செய்துள்ளது.

சிரியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள மைசூர்ப் பருப்பு குடியிருப்பாளர் ஒருவருக்கு ஒரு றாத்தல் வீதம் பங்கீட்டுமுறையில் வழங்கப்படும். கூட்டுறவுக் கடைகள் மூலம் மட்டுமே விநியோகிக்கப்படவுள்ள இப்பருப்பின் விலை றாத்தல் ரூபா 4 ஆகவிருக்கும்.

தற்போதுள்ளது போன்றே மல்லி கூப்பனொன்றுக்கு ஓர் அவுன்ஸ் வீதம். அவுன்ஸ் ஒன்று 12 சதமாக விநியோகிக்கப்படும். எனினும் மேலதிகமாக வாங்க விரும்புவோர் றாத்தல் 8 ரூபாவுக்கு சகல கடைகளிலும் மல்லியைப் பெற்றுக் கொள்ளலாம். [ம]

## திருட்டு

(திருமலை)

திருமலையில் வித்தியாலயம் வீதியில் ஆறுமுகம் இராசையா என்பவரின் வீட்டில் திருட்டு நடைபெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவது வீட்டுச் சொந்தக்காரர்கள் வீட்டில் நித்திரையில் ஆழ்ந்திருக்கும் சமயம் பார்த்து திருடர்கள் வீட்டினை உடைத்து அங்குள்ள பெறுமதியான உடுதுணிகள், நகைகள் கைக்கடிகாரம், திருடிச் சென்றனர் என அறிய வருகிறது.

திருமலைப் பொலிஸார் இந்தவிடயத்தில் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள் இதுவரை எவரும் கைதாகவில்லை. (உ)

## கிராம விஸ்தரிப்புத் திட்டம்

(வல்லுரிபண்ணை)

யாழ்ப்பாணத்தில் உள்ள புதிய நான்கு குடியேற்றத் திட்டங்களில் ஒன்றான திருநெல்வேலி கிராம விஸ்தரிப்புத் திட்டத்தில் காணி பெற்றவர்கள் தம்து காணிகளில் வீடு கட்டும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை குடிதண்ணீர் இல்லாத நிலை, இத்திட்டத்தில் இருந்து வந்ததால் பலர் வீடுகள் கட்டி குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இத்திட்டத்தில் ஒன்பது பொதுக் கிணறுகள் வெட்டும் வேலைகள் கடந்த ஒரு வருடமாக வெடிமருந்து கிடைக்காமல் தாமதமடைந்தது. இதனால் இங்கு குடியேறிய மக்கள் தோட்டங்களில் உள்ள கிணறுகளில் தண்ணீர் எடுத்து பாவித்து வருகின்றனர்.

தற்பொழுது இப்பொதுக் கிணறுகள் தோண்டும் வேலைகளை இத்திட்ட அபிவிருத்திச் சங்கம் தொடங்கியுள்ளது அரசாங்க அதிபரதும், பொலிஸ் அதிபரதும் விஷேட உத்தரவின் மீது இக்கிணற்று வேலைகளுக்கு வெடிமருந்துகள் கொடுக்கப்படுகின்றன.

இக்கிணற்று வேலைகள் மீண்டும் ஆரம்பித்ததும் அதிகமானோர் வீடு அமைக்கும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் கிணற்று வேலைகள் முற்றாக முடிவடையும் வரை வீடு கட்டுவதற்கும், குடியேறுவதற்கும் அவகாசம் தருமாறு சிலர் அரசாங்க அதிபரையும் காணி உத்தியோகத்தரையும் கேட்டுள்ளனர் இம்மாத இறுதிக்குள் குடியேறாத காணிகள் ரத்துச் செய்யப்படும் என்று காணி மேற்பார்வையாளர்கள் கொடுத்த தகவல்களைத் தொடர்ந்து இவ்வறிவித்தலை குடியேறாதவர்களில் ஒருபகுதியினர் அனுப்பியுள்ளனர். (உ)

## விளையாட்டுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

உடுவில் கல்வி வட்டாரப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 28, 29, 31-ம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானங்களில் நடைபெறும்.

உடற்பயிற்சிப் போட்டி 17-ம் திகதி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக கல்லூரியில் நடைபெறும். வட்டார வலைப்பந்து, கைப்பந்துப் போட்டிகள் சித்திரை முதல் வாரத்தில் நடைபெறும். (உ)

குருகுலம்

## கட்டடத் திறப்புவிழாவும் பயிற்சி ஆரம்பவிழாவும்

### கிளிநொச்சியில் இன்று நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி குருகுலம் புதிய கட்டிட திறப்புவிழாவும் "சர்வசக்தி" பயிற்சி ஆரம்ப விழாவும், 14ம் வருட குருகுல நிறைவு விழாவும் இன்று காலை நடைபெறுகின்றது.

புதிய கட்டிடத்தை கிளிநொச்சிதேசிய பேரவை உறுப்பினர் திரு. வி. ஆனந்தசங்கரி திறந்துவைக்கின்றார். மங்கல விளக்கை மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராஜா ஏற்றி வைப்பார்.

விழாவிற்கு சுவாமி சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி மாதாஜி தலைமை வகிப்பார். பிரதம விருந்தினர்களாக நீதிபதி சோ. இராஜநாதன், குடிசைக் கைத்தொழில் பிரதம இயக்குனர் திரு எஸ். விஸ்வநாதன், திரு. ஈ. வி. டேவிட்ராஜு, பேராசிரியர் அ. சின்னத்தம்பி திரு. எஸ். எம். கோபாலரத்தினம் கலந்துகொள்வர்.

ஆசியுரையை தவத்திரு வடிவேல் சுவாமிகள், வண. பிதா தேவராஜ், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் வழங்குவர்.

மாலை நிகழ்ச்சிகளில், கருத்தரங்கம், இசையரங்கு, இயலரங்கு, வில்லுப்பாட்டு, நாடக நடன நிகழ்ச்சிகள் இடம்பெறும். (செ)

## வில்லிபாரதம் தொடர்விரிவுரை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் றோட் ஸ்ரீ நாச்சிமார் கோயிலில் அலங்காரத்திருவிழாவை முன்னிட்டு தினமும் இரவு 8-30 மணியிலிருந்து 9-30 மணிவரை நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகளது பிரதம சிஷ்யன் "காலக்ஷேபவாரிதி" பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா பக்கவாத்திய சகிதம் "வில்லிபாரதம்" தொடர்விரிவுரை நிகழ்த்துகின்றார்.

இம்மாதம் 12ம் திகதி ஆரம்பமாகிய அலங்காரத்திருவிழா 26ம் திகதி பங்குனி உத்தர திருவிழாவுடன் பூர்த்தியாகும். [இ]

## இன்று

நல்லூர்-நாயன்மார் கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் கோவில் திருவிழா இன்று ஆரம்பமாகிறது. திருவிழாக் காலத்தில் தினமும் இரவு பஜனையும், சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறவுள்ளது. நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழகம் ஒழுங்குசெய்துள்ளது. (இ)

## திடீர் மரணம்

[திருநெல்வேலி]

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்த சு. ஆனந்தம் நேற்றுத் திடீரென மரணமானார்.

கடமையாற்றிக்கொண்டிருக்கையில் நெஞ்சு வலி ஏற்பட்டதாகவும், பின்னர் இவர் மயங்கி விழுந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இவரது மறைவுக்கு ப. நோ. கூ. சங்கம் தனது அனுதாபத்தைத் தெரிவித்து தனது வேலைகளை இடைநிறுத்திக் கொண்டது.

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மத்திய சனசமூக நிலைய 7வது ஆண்டு விழா ஏப்பிரல் முதலாம் திகதி பிற்பகல் நடைபெறவுள்ளது.

திரு. எஸ். இராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் கலந்து கொள்வார். [உ]

## அம்பாள் மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் மகோற்சவம் இம்மாதம் 24ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

## சாராய விற்பனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டைத் தாக்கல்செய்தார்.

சனிக்கிழமை இரவு கலால் பகுதியினர் கச்சதீவில் நடத்திய பரிசோதனையின்போது திரு. இராசரத்தினமும், இவரது உதவியாளர் திரு. ஜெயரத்தினமும் எதிரிவைக் கைது செய்தனர்.

ஊர்காவற்றுறை பதில் நீதிபதி திரு. ஏ. எஸ். நடராசா ஞாயிற்றுக்கிழமை கூடிய சச்சதீவு நீதிமன்றத்தில் இவ்வழக்கை விசாரணைசெய்து தீர்ப்பளித்தார்.

கச்சதீவில் கலால் பகுதியினரால் தொடரப்பட்ட முதல் வழக்கு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## உணவிலிருந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆச்சரியத்துடன் வெளியில் எடுத்தார். அசல் முத்து அது! இந்தப் பெண்மணி மென்று ருசித்த சடலுணவில் இருந்த முத்தின் விலை என்ன தெரியுமா? நாலாயிரம் அமெரிக்க டாலர் பெறுமதி கொண்டது. அதாவது, இலங்கை ரூபா கணக்கின்படி சுமார் ரூ. 60,000!

## மகளிர் பேரவை

### புனரமைப்புக் கூட்டம்

### காங்கேசன்துறையில் 20-ல் நடக்கும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மகளிர் பேரவை புனரமைப்புக்கான கூட்டமொன்று இம்மாதம் 20ம் திகதி மாலை காங்கேசன்துறை தமிழர்விடுதலைக்கூட்டணி பணிமனையில் நடைபெறவுள்ளது.

மாவிட்டபுரம், பலாலி, வீமன்காமம், மயிலிட்டி, தையிட்டி காங்கேசன்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மகளிர்பேரவை உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மகளிர் பேரவைத் தலைவி திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். [செ]

## நோயாளர் அவதி

(சங்கானை)

சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்துத்தட்டுப்பாடு நிலவுவதால் நோயாளர் பெரும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர்.

இங்கு தங்கி சிகிச்சைபெறுவோருக்கு உணவும் வழங்கப்படுவதில்லையென புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanadu. Telephone 389. Registered as a Newspaper in Srilanka